# வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2014
## கர்நாடக சங்கீதம்

தரம் - 10

நேரம்:- 3 மணித்தியாலம்

பகுதி I

01. சரியான விடையைத் தெரிவு செய்க.

1) நுண்கலைகளில் மிகவும் மேன்மையானது
1. சங்கீதம் 2. நடனம் 3. சிற்பம் 4. சித்திரம்

2) சங்கீதத்திற்கு ஆதாரமானது
1. பாட்டு 2. நாதம் 3. ஸ்வரம் 4. தாளம்

3) ஜன்னிய இராகங்களின் பிரிவுகள்
1. 6 2. 5 3. 8 4. 7

4) அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று
1. வர்ணம் 2. தில்லானா 3. கீதம் 4. தேவாரம்

5) எல்லா ஸ்வரங்களும் கோமளமாகவுள்ள இராகம்
1. தோடி 2. கல்யாணி 3. பிலஹரி 4. மோகனம்

6) தாளக் கட்டுப்பாட்டிற்குள் அடங்கும் பாடல் வகை
1. விருத்தம் 2. நிபந்தம் 3. அநிபந்தம் 4. வெண்பா

7) "இராமதாச" முத்திரையையுடைய வாக்கேயகாரர்
1. புரந்தரதாசர் 2. பாபநாசம்சிவன்
3. கோபாலகிருஸ்ண பாரதியார் 4. முத்துஸ்வாமி தீட்சிதர்

8) நின்னுகோ / ஆலிலை எவ்வகையான உருப்படி
1. வர்ணம் 2. பதம் 3. கீர்த்தனை 4. இராகமாலிகை

9) வர்ணத்தின் பிரிவுகள்
1. 4 2. 3 3.2 4. 5

10) பண் - பழம் பஞ்சுரம் இதற்குரிய இராகம்
1. கல்யாணி 2. ஆரபி 3. மாயாமாளவகௌளை 4. சங்கராபரணம்

11) "முகரந்திரம் " காணப்படும் வாத்தியம்
1. வீணை 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம் 4. வயலின்

12) இந்தியாவின் தேசிய வாத்தியம்
1. மிருதங்கம் 2. வயலின் 3. வீணை 4. தவில்

13) திஸ்ரநடைக்குரிய ஜதி
1. தகதிமி 2. தகிட 3. தகதகிட 4. ததிங்கிணதொம்

14) ஸரிகபதஸ, ஸநிதபமகரிஸ - இதற்குரிய இராகம்
1. மோகனம் 2. ஆரபி 3. மலஹரி 4. பிலஹரி

15) வக்ர இராகப் பிரிவுகள்
1. 3 2. 5 3. 2 4. 4

16) "ஏழு மலை மேல்" என்ற உருப்படியின் இராகம்
1. சங்கராபரணம் 2. மாயாமாளவகௌளை
3. சுத்தசாவேரி 4. கல்யாணி

17) வர்ணத்தில் பூர்வாங்கப் பகுதியில் அடங்குவன
1. பல்லவி, அனுபல்லவி, சரணம் 2. பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்
3. சரணம், சிட்டை ஸ்வரங்கள் 4. பல்லவி, அனுபல்லவி, சிட்டை ஸ்வரங்கள்

18) தாளத்தந்திகளுடன் கூடிய வாத்தியம்
1. வயலின் 2. கிற்றார் 3. தம்புரா 4. வீணை


kalvi.lk

19) ஸ்வரரூபமாகப் பாடப்படும் உருப்படி

1. கீதம் 2. ஜதீஸ்வரம் 3. ஸ்வரஜதி 3. வர்ணம்

20) பிலஹரி எவ்வகையான இராகம்

1. உபாங்கம் 2. பாஷாங்கம் 3. வக்ர இராகம் 4. ஜனக இராகம்

21) நேத்ர சக்கரத்தில் 2வது இராகம் (நேத்ர - ஸ்ரீ)

1. ஆரபி 2. ஹம்சத்வனி 3. கரகரப்பரியா 4. தோடி

22) "சம்போ மஹா தேவா" என்ற உருப்படியை இயற்றியவர்

1. T. V. பிச்சையப்பா 2. T. R. மகாலிங்கம்

3. புரந்தரதாஸர் 4. தியாகராஜர்

23) சங்கீதத்தில் கோவை என அழைக்கப்படுவது

1. கேள்வி 2. ஸ்வரம் 3. நிலை 4. நாதம்

24) 9 வது ஸ்வரஸ்தானம்

1. பிரதி மத்திமம் 2. சதுஸ்ருதி தைவதம்

3. சுத்த தைவதம் 4. பஞ்சமம்

25) கமாகரீ, ஸரி; ஸரிகபா - இதன் அட்சர எண்ணிக்கை

1. 16 2. 13 3. 15 4. 17

26) சாமகானம் பாடப்படும் இராகம்

1. கல்யாணி 2. கரகரப்பிரியா 3. கீரவாணி 4. சாவேரி

27) பண்ணிசை தோற்றம் பெற்ற காலப்பகுதி

1. 4ம் 5ம் நூற்றாண்டு 2. 7ம் 8ம் நூற்றாண்டு

3. 10ம் 11ம் நூற்றாண்டு 4. 3ம் 4ம் நூற்றாண்டு

28) வாத்தியத்திரயத்தில் 2வது இடத்தை வகிப்பது

1. மிருதங்கம் 2. வீணை 3. புல்லாங்குழல் 4. வயலின்

29) "கோவிந்த சிவம்" என்பவரை குருவாகக் கொண்ட வாக்கேயகாரர்

1. பாபநாசம்சிவன் 2. புரந்தரதாசர்

3. கோபாலகிருஸ்ண பாரதியார் 4. தியாகராஜர்

30) "விசித்திர சித்த சங்கீர்ண" என்ற விருதிற்குரிய மன்னன்

1. மகேந்திரவர்மன் 2. இராஜராஜசோழன் 3. பாவநாசம்சிவன் 4. சோழ மன்னர்கள்

31) சதுஸ்ரஜாதி துருவ தாளத்தின் மொத்த அட்சரம்

1. 12 2. 15 3. 10 4. 14

32) பிரதானமாகவும், பக்க வாத்தியமாகவும் வாசிக்கப்படும் தோற்கருவி

1. தவில் 2. மிருதங்கம் 3. கெஞ்சிரா 4. உடுக்கு

33) ஆலயங்களில் அதிகாலையில் பாடப்படுவது

1. தேவாரம் 2. திருவெம்பாவை

3. திருப்பள்ளியெழுச்சி 4. திருப்புராணம்

34) "மோஸகோதனல்லோ" என்ற உருப்படியைப் பாடியவர்

1. அபிராமிப்பட்டர் 2. புரந்தரதாசர் 3. முத்துத்தாண்டவர் 4. குமரகுருபரர்

35) நாட்டியக் கச்சேரியில் 2 வது இடத்தைப் பெறுவது

1. தில்லானா 2. பதம் 3. ஸ்வரஜதி 4. அஷ்டபதி

36) I I O O இவ் அடையாளம் குறிக்கும் தாளம்

1. ஜம்பை தாளம் 2. திரிபுடைதாளம் 3. மட்டியதாளம் 4. அடதாளம்

37) ஜாதி பேதத்திற்கு உட்படும் அங்கம்

1. திருதம் 2. லகு 3. அனுதிருதம் 4. குரு

38) ஔடவ இராகத்திற்கு உதாரணம்

1. மோகனம் 2. மலஹரி 3. ஆரபி 4. பிலஹரி

39) ஷடங்கத்தில் அடங்கும் அங்கங்கள்

1. 3 2. 5 3. 6 4. 7

40) மூலாதார மூர்த்தி என்ற உருப்படியை இயற்றியவர்

1. பாபநாசம்சிவன் 2. அருணகிரிநாதர் 3. புரந்தரதாசர் 4. திருஞானசம்பந்தர்

(20 × 1 = 20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

★ முதலாம் வினா உட்பட 5 வினாக்களிற்கு விடை தருக.

**I.**

1. சிரவண்கலை எனப்படுவது.
2. தற்காலத்தில் வழக்கத்திலுள்ள பண்களின் எண்ணிக்கை.
3. 1810 - 1896 காலப்பகுதியில் வாழ்ந்தவர்.
4. ஏகத்வனி வாத்தியமாகக் கருதப்படுவது.
5. பன்னிரு திருமுறைகளும் தொகுக்கப்பட்ட காலம்.
6. ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் காபி என அழைக்கப்படும் இராகம்.
7. வீணையில் வாசிக்கும் தந்தி சுருதி சேர்க்கப்படுவது.
8. அருமருந்தொரு என்ற உருப்படியைப் பாடி விடம் நீக்கப்பெற்றவர்.
9. சுத்த இசைக்கு ஆரம்பமாகக் கொள்ளப்படுவது.
10. ஷடங்கத்தில் அடங்கும் அங்கங்களாவன. (12 புள்ளிகள்)

**II.** சிறுகுறிப்பு எழுதுக.

1. உபாங்கம்
2. விக்ருதி ஸ்வரங்கள்
3. லயம்

(12 புள்ளிகள்)

**III.** உருப்படி லட்சணம் எழுதுக.

1. வர்ணம்
2. ஸ்வரஜதி

(12 புள்ளிகள்)

**IV.** இராக லட்சணத்தை விபரிக்க.

1. கல்யாணி அல்லது கரகரப்பிரியா

(12 புள்ளிகள்)

**V.**

1. வேணு என அழைக்கப்படும் வாத்தியம்.
2. அதன் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
3. அதன் அமைப்பினை விபரிக்க.

(12 புள்ளிகள்)

**VI.**

1. நந்தனார் சரித்திரத்தை இயற்றிய வாக்கேயகாரர் யார்?
2. வாழ்க்கைக் காலம்
3. பெற்றோர்
4. இசைப் பயிற்சி, குரு
5. இசைப்பணி
6. இயற்றிய உருப்படிகள், இசை நாடகங்கள்
7. முத்திரை

(12 புள்ளிகள்)

**VII.** ஜன்னிய இராகப் பிரிவுகளை உதாரணத்துடன் விளக்குக. (12 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page